# மன்னா

CSI தமிழ் திருச்சபை
அலைன்



"இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என்ற சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்". யாத்திராகமம் 3:9

**And now the cry of the Israelites has reached me, and I have seen the way the Egyptians are oppressing them. Exodus 3:9**


பொழிவு12 மே 2019 ஆகாரம் 05

# VBS Final Day



































## 2019 மே மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of May 2019

| | | |
|---|---|---|
| 03rd May 11:00AM–1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 03rd May 7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 10th May 7:00PM – 9:00PM | மாலை ஆராதனை வேதாகம தேர்வு | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 17th May 7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 18th May 7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 24th May 7:30PM–8:30PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st May 7:00PM – 9:00PM | துதி பாடல் ஆராதனை மிஷன் வெள்ளி | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st May 11:30PM-12:30AM | மாத இறுதி மற்றும் ஜுன் மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

திருச்சபையின் ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.
050 586 8173 / 056 441 1225 / 050 482 1006

## உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
செயலரிடமிருந்து
வேதாகம களஞ்சியம்
கட்டுரைகள்
சிறுவர் பகுதி
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள் திருமண நாள் ஆசரிப்போர்
தெரிந்து கொள்வோம்
தினசரி வேதவாசிப்பு


## CSI தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்–அய்ன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st& 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st& 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளி | 6:15 PM | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1stFriday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |



# Chairman's Desk

## ஆயர் மடல்...

அன்புக்குரியவர்களே!

**Happy Labour's day! Happy May day...!**

நாம் அனைவரும் உழைப்பாளிகளே!

இந்த மே மாதத்தில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள, உடல் உழைப்பால் மிகவும் சோர்ந்து போயிருக்கிறவர்களுக்காகவும், வறுமையின் கொடுமையால் சோர்ந்து போயிருக்கிறவர்களுக்காகவும், குறிப்பாக இந்த நாட்டிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்காகவும் (Camp workers), திருச்சபையாக ஜெபிப்பதோடு, அவர்களை உற்சாகப்படுத்த சில முக்கிய ஊழியங்களை செய்ய நாம் முன்வர வேண்டும். மேதினத்தை கொண்டாட ஆயத்தமாகிக்கொண்டிருக்கிற இந்த உலகில், தொழிலாளர்களின் நலனுக்காக பல நல்ல திட்டங்களை அரசாங்கம் மாத்திரம் எடுத்தால் மட்டும் போதாது, ஒட்டுமொத்த சமுதாயமும், நமது திருச்சபைகளும் தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும்.

இந்த புதிய மாதத்தில் நமது திருச்சபையின் அனைத்து ஊழியங்களிலும் நீங்கள் அனைவரும் உற்சாகத்தோடு பங்குபெற அழைக்கிறேன். குறிப்பாக **வேதாகம தேர்வில்** கலந்து கொண்டு வேதத்தை ஆழமாகக் கற்றுக்கொள்ளுங்கள்.

கர்த்தர் இதுவரை அதிசயமாய் நம்மை நடத்தினார், இனிமேலும் நடத்துவாராக!

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
**Rev. M. Christopher Rajendran**

# திருமறை தியானப்பகுதி...

**“கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும், தரிசனமார்”. 1 கொரிந்தியர் 15:20a,5**

## Christ’s Resurrection Appearances

பரிசுத்த பவுல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுலை குறித்து எழுதும் பொழுது; இயேசுவின் உயிர்த்தெழுதலே முதன்முறையாக தோன்றிய, தனிச்சிறப்பு வாய்ந்த உயிர்த்தெழுதல், இதனை பலர் தங்கள் கண்களால் கண்டோம் என்று சாட்சி பகர்கிறார். ஆதலால் இந்த அற்புத காட்சியைக் குறித்து வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்ப்போம். மற்றும் EXTRA BIBLICAL EVIDENCE என்ன சொல்லியிருக்கிறது என்றும் பார்ப்போம். இவ்வாறு நாம் தியானிக்கும் பொழுது நம்முடைய விசுவாசம் பெலப்படும். நம்முடைய விசுவாசத்திற்கு அடிப்படையே இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலாகும்!

சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம். ஆனால் இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் முற்றிலும் வித்தியாசமானது.புதிய ஏற்பாட்டில் இயேசு நாயினுர் விதவையின் மகனை பாடையை தொட்டு அவனை உயிரோடு எழுப்புகிறார். ஆனால் வயதான பிற்பாடு மரித்துப்போய் விட்டான்.அதே போல ஜெப ஆலயத் தலைவன் யவீருவின் ஒரே குமாரத்தியை உயிரோடே எழுப்பினார் இயேசு, அவளும் வயதான பிற்பாடு மரித்துப்போனாள் . இயேசு மரித்த லாசருவையும் உயிரோடே எழுப்பினார். அந்த லாசருவும் ஒரு நாள் மரித்துப்போய் விட்டான். இதிலிருந்து நமக்கு என்ன தெறிகிறதென்றால் இயேசுவின் உயிர்த்தெழுதல் நித்திய ஜீவிய உயிர்த்தெழுதலாகும். இயேசுவே நமக்கெல்லாம் முன்னோடி!



ஆதலால் இந்த இயற்கைக்கு மேலான உயிர்த்தெழுதலைப்பற்றி போதிய அறிவும், அனுபவமுள்ள யாரும் இந்த உலகத்தில் பிறக்கவில்லை. வேதத்திலுள்ள நிகழ்ச்சிகளையும்,சாட்சிகளையும், மற்றுமுள்ள extra biblical evidence களையும் வைத்துத்தான் சற்று புரிந்து கொள்ள முடியும். பரிசுத்த யோவான் 2:19–22ல் இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை (என் சரீரத்தை) எழுப்புவேன் என்று இயேசு தெளிவாக சொல்கிறார். Risen Power, which is inherent in Jesus Christ already, the endowment of life, the Eternal life which enabled Him to raise from the dead! Resurrected Jesus had the very gift of Eternal life which He bestows upon His Kingdom believers, which makes certain their Resurrection from the bonds of natural death. உயிர்தெழுந்த இயேசுவுக்கு இன்றும் சாட்சிகளாக இருப்பது Undisturbed grave clothes, Empty tomb, bible, மாத்திரமல்ல, கோடான கோடி திருச்சபைகளும், கிறிஸ்துவ விசுவாசிகளும்.

**First Resurrection Appearance of Jesus:**

As per the biblical record Mary Magdalene was the 1st witness, who had encountered with the Risen Lord. Mark 16:9 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். யோவான் 20ம் அதிகாரத்திலும் இந்த முதல் தரிசனத்தை பார்க்கிறோம். வசனம் 14ல் மகதலேனா மரியாள் உயிர்ததெழுந்த இயேசு நிற்கிறதைக் கண்டும் இயேசு என்று அறிய முடியவில்லை,இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது ,they were not the self-deceived victims of visions or Hallucinations. பிற்பாடு இயேசுவின் familiar voice and the way of calling her name வைத்துத்தான் மரியாள் அடையாளம் கண்டு ரபூனி என்றாள். இயேசு தன்னை ஆவலோடு தொடக்கூடாது என்றும் ,தான் இன்னும் பிதாவிடத்திற்கு ஏறிப்போகவில்லை, நீ போய் சீடர்களிடம் நடந்தவைகளைச்சொல்லு என்கிறார். இயேசுவின் உயிர்ததெழுந்த சரீரம் எளிதில் அடையாளம் காணமுடியாததாக இருந்தது.

**Second Resurrection Appearance of Jesus:**

மத்தேயு 28:9,10 வசனங்களில் உயிர்தெழுந்த இயேசு தாமே 5 பெண்களுக்கு (மகதேனா மரியாளும், யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் தாயாகிய மரியாளும், செபதேயுவின் குமாரருடைய தாயும், சலோமே.) எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள். இயேசு அவர்களிடத்தில் அப்போஸ்தலர்களை கலிலேயாவுக்குப்போகும்படி கட்டளையிட்டார். அங்கே என்னைக் காண்பார்கள் என்றார். இந்த இரண்டாவதாக வெளிப்பட்ட தரிசனத்திலும் மகதலேனா மரியாள் இருந்தாள். உயிர்தெழுந்த சரீரம் திடீரென தோன்றி, திடீரென மறைகிறதாய் இருந்தது.

**Third Resurrection Appearance of Jesus:**

ஞாயிறு மதியம் இயேசுவின் சகோதரனான யாக்கோபுவுக்கு ,உயிர்த்தெழுந்த இயேசு காட்சி கொடுத்தார். 3rd appearance occurred about noon of the Sunday at Bethany. இயேசு உயிர்தெழுந்த பிற்பாடு விண்ணுலகம் செல்வதற்கு முன்பாக சுமார் 19 முறை சீஷர்களுக்கு காட்சியளித்தார். James was standing in the garden of Lazarus's empty tomb. அப்பொழுது மகதலேனா மரியாள் உயிர்ததெழுந்த இயேசுவை தானும், மற்ற பெண்மணிகளும் யோசேப்பின் காலியாக இருந்த கல்லறைக்கருகிலே பார்த்த செய்தியை அங்கேயிருந்தவர்களுக்கு சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, உயிர்த்தெழுந்த இயேசு வின் பிரசன்னத்தை யாக்கோபு காண்கிறார், James beheld the strange form of Risen Jesus by

his side. He was too much amazed to speak and too frightened to flee, Risen Jesus said to him "James I come to call you to the service of the Kingdom of heaven. Join earnest hands with your brethren and follow after Me". After recognised the Risen Lord James started to fall to his knees, exclaiming "My Father and my Brother". Suddenly Risen Lord Jesus vanished before him.

**Fourth Resurrection Appearance of Jesus:**

**பெத்தானியாவிலுள்ள மார்த்தாள், மரியாள் இல்லத்தின் பின்புறமாக உள்ள திறந்திருந்த கதவின் வழியே திடீரென பிரவேசித்து தன்னுடைய குடும்பத்தை சார்ந்தவர்களுக்கும், மற்ற நண்பர்களாக இருந்த சுமார் 20 நபர்களுக்கு காட்சி கொடுத்தார். இந்த இடத்தில் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்?** How could you doubt? Why have you lingerd so long before choosing to follow the light of Truth in the Father's Kingdom? While they move forward to embrace the Lord, He suddenly vanished from their sight. Then they all rush off to the city to tell the doubting Apostles about what had happened.

**Fifth Resurrection Appearance of Jesus:**

**அன்றைய ஞாயிறு மாலை 4.15 மணிக்கு உயிர்த்தெழுந்த இயேசு அரிமத்தேயா யோசேப்பு வீட்டில் கூடியிருந்த சுமார் 25 பெண் விசுவாசிகள் மத்தியிலே பிரசன்னமானார். மகதலேனா மரியாளும் அந்த கூட்டத்தில் தான் காலைமுதல் பல முறை உயிர்தெழுந்த இயேசுவை பார்த்த அனுபவங்களை சொல்லிக்கொண்டிருந்தாள். அப்பொழுது இயேசு திடீரென அவர்கள் மத்தியிலே தரிசனமானார்.** Greeted them saying Peace be upon you. In the kingdom of God there shall be neither jewellery nor gentiles, rich or poor, men or women, go and publish the good news of Salvation. And I will be with you always. He vanished suddenly from their sight. While the women fellowship on their faces and worship in silence. So far Mary Magdalene had witnessed four appearances of the Risen Lord Jesus. Really, she was a Blessed woman.

**Sixth Resurrection Appearance of Jesus:**

**அன்று மாலை 4.30 மணி அளவில் 40 கிரேக்க விசுவாசிகள்** Flavius **என்பவரது வீட்டில் கூடியிருந்தபொழுது, பூட்டப்பட்ட கதவு வழியாக இயேசு பிரவேசித்து, அவர்களை உற்சாகப்படுத்தினார்.** Peace be upon you, go to all the world proclaim the gospel of Salvation. Suddenly He vanished from their sight. Meanwhile after hearing about the appearance of the Risen Lord, Jews convened Sanhednists and took a decision that anyone say about Risen Jesus throw out from Synagogue or put to death.

**Seventh Resurrection Appearance of Jesus:**

At Emmaus about 7 miles west of Jerusalem there lived 2 brothers, they were Shepherds. Cleopas, the elderly was a partial believer in Jesus, but Jacob was not a believer. On Sunday 5 o' clock evening they were going by walk towards Emmaus, another 4 miles to go to reach Emmaus. While they were talking about the crucifixion of Jesus, rumours about empty tomb, Cleopas was in doubt, but Jacob did not believe. **இந்த இரு சகோதரர்களும் வாக்குவாதம் செய்துகொண்டிருந்த சமயத்தில்தான், உயிர்த்தெழுந்த இயேசு அவர்களோடே சேர்ந்து நடந்துகொண்டு அவர்களுக்கு வேதத்திலே இயேசுவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை விளக்கிவிட்டு, அவர்களுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிகிறது, பின்னர் அவர்களுடைய வீட்டில் பந்தியில் தன்னை வெளிப்படுத்தினார். உடனே பரவசத்தோடு இந்த அற்புத செய்தியை அப்போஸ்தலரிடத்திலே சொல்ல**

ஓடினார்கள். இந்த நிகழ்ச்சியை வேதத்தில் (Luke 24 :13–35, Mark 16:12,13). அவர்கள் சென்று சொல்லியும் 11 அப்போஸ்தலர்கள் நம்பவில்லை.

**Eighth Resurrection Appearance of Jesus:**

Resurrection Sunday was a terrible day for the Apostles, ten of them spent the larger part of the day in the upper room behind the barred doors. They might have fled from Jerusalem in order to escape from Jewish authorities. Thomas was brooding over his troubles alone at Bethpage. All this day Peter vacillated emotionally between faith and doubt concerning the master's Resurrection. He witnessed the empty tomb along with John, he had witnessed also the Undisturbed grave clothes. He was worrying about why Master appeared before so many, why He did not appear before the Apostles, he thought that maybe they deserted, betrayed, 3 times denied the Master. இந்த சமயத்தில் சுமார் 8.30 மணி இரவு இயேசு மார்க்கின் வீட்டுத்தோட்டத்திலே பேதுருவுக்கு காட்சியளித்தார். Peter and the Risen Lord Jesus walked through the garden and talked of the things past, present and future for almost five minutes. Then the Master vanished from his gaze, saying farewell, Peter, until I see you with your brethren. In this meeting Risen Lord encouraged him to preach the gospel. Then Peter rushed to the upper chamber and explained everything to the Apostles " I have seen the Risen Master ,I talked with Him and He has forgiven me."

**Ninth Resurrection Appearance of Jesus:**

பேதுரு சொல்லியும் அச்சத்திலும், குழப்பத்திலும், சந்தேகத்திலுமிருந்த அப்போஸ்தலர்கள் மத்தியிலே இயேசு இரவு 9 மணிக்கு பூட்டிய அறையில் காட்சியளித்து, கடிந்து கொண்டு உற்சாகப்படுத்தினார் ஊழியம் செய்ய. அப்பொழுது தோமா அங்கே இல்லை. (John 20: 19– 24).

**Tenth Resurrection Appearance of Jesus:**

மறுபடியும் 8 நாளைக்கு பின்பு அப்போஸ்தலர் மத்தியிலே இயேசு காட்சி கொடுத்தார், அப்பொழுது தோமாவினுடைய சந்தேகத்தைக் பறக்கும் வண்ணம் தன் காயமடைந்த கரங்களை காண்பித்து, தன்னுடைய சரீரம் உயிர்த்தெழுந்த சரீரம் என்பதை நிருபித்தார்.

இவ்விதமாக இயேசு சுமார் 19 முறை 40 நாட்களில் காட்சியளித்து சீஷர்களை பெலப்படுத்தினார். இதை வசிக்கிற நாமும் விசுவாசத்தில் பெறப்படுவதாக!

**அன்புடன்... உங்கள் ஆயர்,**
**Rev. M. Christopher Rajendran**

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| **மிஷனரி பெயர்** | **திரு. சூரிபால் சதா** | **திரு. கிறிஸ்டோபர்** |
| **பணித்தளம்** | நீலமங்கலம்,<br>கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர்<br>குருகிலாமூர் |
| **ஸ்பான்ஸர் தொகை** | **AED 450/- Month** | **AED 450/- Month** |
| **கர்த்தர் உங்களோடு பேசுவாரனால்...நீங்களும் இந்த மிஷனரி ஊழியத்தை தாங்க முன்வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறேம்** | | |

# செயலரிடமிருந்து...




**போராடி வென்ற தொழிலாளர் தினம்**
**இன்று பேச்சிலும், சட்டத்திலும்,**
**சிகப்பு வர்ணம் கொடிகளிலும் மட்டுமே வாழ்கிறது...**
**மனதால் உழைப்பின் புனிதத்தை உணர்வோம்..**
**உண்மை தொழிலாளர் தினம் கொண்டாடுவோம்...!!!**

பிரியமானவர்களே...

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்கள் யாவருக்கும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. ஜெபத்தினாலும் தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வூழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவாராக.

சென்ற மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். நம்முடைய பிள்ளைளுக்கு விடுமுறை வேதாகம வகுப்புகள், வியாகுல வியாழன் ஆராதனை, குருத்தோலை பவனி, 11வது சபைநாள் விழா, வருடாந்திர பொதுக்குழு கூட்டம் இவையனைத்தும் நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபைக்கூர்ந்தார். 11வது சபைநாள் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக டாக்டர். புஷ்பராஜ் அவர்கள் (ஜாமகாரன் ஊழியங்கள்) கலந்து கொண்டது மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. 26 ஏப்ரல் அன்று வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது அன்பின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கிறேன். அநேகர் உங்கள் கருத்துக்களை தெரிவித்தீர்கள்; உங்கள் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளுக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சபையின் வளர்ச்சியில் தொடர்ந்து உங்கள் ஆதரவை தாருங்கள். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறவர், அவர் இன்னும் செய்வார்.

வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.




**இப்படிக்கு ...**
**அன்புடன் கிறிஸ்துவின் பணியில்**
**S. சுரேஷ் ராஜன்**

# கண்ணீர் ...



கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களே..

உங்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் இனியநாமத்தில் வாழ்த்துகின்றேன். இந்த உலகத்தில் நாம் நமது அனுதின வாழவில் பல வேளைகளில், பலவிதங்களில் கண்ணீர் சிந்துகின்றோம். தோல்வியை சந்தித்தால்… குடும்பத்தில் வறுமையை நினைத்து…மருத்துவ மனையில் மருத்துவர்கள் கைவிட்டால்…உறவினர்கள் நண்பர்கள் மரித்துவிட்டால், சரீரத்தில் வியாதி வந்தால்...இப்படி பல வேளைகளில் கண்ணீர் சிந்தின நாம் கீழே சொல்லப்பட்டிருக்கிற மூன்று வகை கண்ணீரை சிந்தி இருக்கிறோமா? இல்லை என்றால், இந்த காரியங்களுக்காக கண்ணீர் சிந்துவோம். அதுவே நம் வாழ்க்கைக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.

## அறிக்கையின் கண்ணீர் (Tears of Confession)

நாம் நம் பாவத்தை உணர்ந்து அறிக்கையிட வேண்டும். கண்ணீரோடு தேவ மன்னிப்புக்காய் கதற வேண்டும். இதுவரை நம் பாவத்தை அறிக்கையிடும் போது கண்ணீர் சிந்தி இருக்கிறோமா? லூக்கா 7:38-44 வசனங்களில் மரியாள் கிறிஸ்துவின் பாதத்தைக் கண்ணீரால் கழுவுகிறாள் என்று சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இவள் பாவியான ஸ்திரீ என்று லூக்கா 7:37-39 வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆண்டவர் அவள் கண்ணீரை அங்கீகரிக்கிறதை 47ம் வசனத்தில் பார்க்கிறோம். லூக்கா 7:47, 48ல் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று கூறுகிறார். நம் பாவத்திற்காய் அறிக்கையிட்டு கண்ணீர் சிந்துவோம். கிறிஸ்துவும் மனமிரங்கி நம் பாவங்களை மன்னிப்பார்.

## ஒப்புக்கொடுத்தலின் கண்ணீர். (Tear of Commitment)

1சாமுவேல் 1:10ல் அன்னாள் அழுவதை காண்கிறோம். கண்ணீரோடு தேவனிடம் பொருத்தனை செய்கிறாள். இன்னும் பிறக்காத மகனை 11'ம் வசனத்தில் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறாள். 15'ம் வசனத்தில் கர்த்தருடைய சன்னிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன் என்கிறாள். அன்னாள் நிலைமையை நாம் நன்கு அறிவோம். அவளின் கர்ப்பம் அடைபட்டதால் கண்ணீர் சிந்தினாள். நாம் சிறிது யோசிப்போம். திருமணம் ஆகி ஒரு சில வருடத்தில் பிள்ளை செல்வம் இல்லை என்றால் எத்தனை விதமான ஏளனப்பேச்சு. அதுமட்டும் அல்ல. மங்களகரமான காரியத்திற்கு அவர்களை ஒதுக்கிவிடுகின்றனர். இந்த நிலையில்தான் அன்னாள் கர்த்தரின் சந்நிதியில் கண்ணீர்விட்டு தன் காரியத்தை கர்த்தரிடம் ஒப்படைக்கிறாள். 18ம் வசனம் சொல்கிறது அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை. காரணம் கர்த்தர் என் கண்ணீரை கனப்படுத்துவார் என்று நம்பினாள். கர்த்தர் அவள் கண்ணீரைப் பார்த்து பல மடங்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். **கேட்டதோ 1 ஆனால் 21ம் வசனம் சொல்கிறது 3 குமாரர் 2 குமாரத்திகளை தேவன் கொடுத்தார்.**

உங்கள் பிரச்சனைகளையும், கவலைகளையும் ஆண்டவரிடம் கண்ணீரோடு ஒப்படைக்கும் போது உங்கள் கண்ணீரைக் காண்கிறவர் மட்டும் அல்ல, கண்ணீரைத் துடைத்து உங்களை ஆசீர்வதிக்கிறவர்.

## மனதுருக்கத்தின் கண்ணீர். (Tears of Compassion)

லூக்கா 19:41ல் இயேசு எருசலேமை பார்த்து கண்ணீர் விட்டார். தேசத்திற்காக கண்ணீர் விட்டிருக்கிறோமா? நம் இந்திய தேசம் பாவத்தில் இருந்து விடுதலை அடைந்து இயேசுவிடம் வருவதற்கு நாம் கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும். ஆதியாகமம் 18:20ல் சோதோம் கோமோராவின் பாவம் கொடிதாய் இருந்ததால்

அழிப்பேன் என்று தேவன் சொன்னபோது அந்த தேசத்திற்காய் ஆபிரகாம் திறப்பின் வாசலில் நின்று கண்ணீரோடு போராடி ஜெபிக்கிறதை ஆதி 18:22-32ம் வசனம் வரை வாசிக்கிறோம். 32ம் வசனத்தின் கடைசி பகுதி அவனுடைய கண்ணீரையும் ஜெபத்தையும் தேவன் கனப்படுத்துகிறதை பார்க்கிறோம்.

**கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே!** நீங்களும் நானும் நமக்காகவும் நமது குடும்ப ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிக்கிறோம். அதேபோல் நம் தேசத்திற்காகவும் ஆபிரகாமை போல போராடி கண்ணீர்விட்டு தேவ சமூகத்தில் மன்றாடுவோமா?

நம் வாழ்வில் பல சூழலில் கண்ணீரை சிந்திய நாம் மேலே சொன்ன காரியத்திற்காய் கண்ணீர் சிந்தி இருக்கிறோமா? சிந்திப்போம்! செயல்படுவோம். நம் கண்ணீரை கிறிஸ்து கனப்படுத்த காத்துக்கொண்டு இருக்கிறார். இப்படிப்பட்ட காரியத்திற்காக கண்ணீர் விடுகிற கிறிஸ்தவ மக்களாய் மாற தேவன் உதவி செய்வாராக.

**விளைவின் முதற்பலன் கர்த்தருக்கு...**
**வருமானத்தில் பத்தில் ஒரு பகுதி தேவனுக்கே...!**
**உற்சாகமாக கொடுத்து தேவனை மகிமைப் படுத்துவோம்.**
**நமக்கென்று சேர்த்துவைக்கும் பொருள் நம்மோடு வராது.**
**தேவனுக்கென்று கொடுக்கும் செல்வத்தின் மூலம்**
**நாம் சேர்க்கும் ஆத்துமா மட்டுமே நம்மோடு நித்திய வீட்டிற்கு வரும்.**
**தேவனுக்கு சேரவேண்டிய பொருள் நம்மிடம் இருந்தால்,**
**அதுதான் நமக்கு நஞ்சு.**



வேதாகம களஞ்சியம்




**நாம் என்னசெய்ய வேண்டுமென்று நம்மை அழைத்த தேவனுக்கு தெரியும்!**

**தெரியாது...! தெரியாது...!**
**இவர்களில் ஒருவருக்கும் தெரியாது**

- பேரழிவில் காப்பாற்றப்பட்டு, பேழையின் கதவு திறக்கப்படும்வரை. நோவாவிற்கு தெரியாது தேவன் தன்னை ஓர் புதிய உலகில் தரையிறக்குவாரென்று.
- எகிப்திற்கு வரும்வரை யோசேப்பிற்கு தெரியாது குழியில் கிடந்த தன்னை, தேவன் எகிப்திலே குபேரனாக்குவாரென்று. ஆதி 41:43.
- பெத்லகேம் வரும்வரை, ரூத்திற்கு தெரியாது போவாசின் மனைவியாவாளென்று. ரூத் 4:10
- மீனானது தன்னை நினிவேயின் கரையில் கக்கும்வரை, யோனாவிற்கு தெரியாது ஆண்டவர் தன்னை மீண்டும் நினிவே பட்டணத்திற்கே அனுப்புவாரென்று. யோனா 2:10
- ஜெபவீடு வரும்வரை, பேதுருவுக்கு தெரியாது தனக்காக ஒரு கூட்டம் இரவு ஜெபம் செய்கிறார்களென்று. அப் 13:17.
- பத்மு தீவிற்கு வரும்வரை யோவானுக்கு தெரியாது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை தான் எழுதுவேனென்று.
- இப்படி அநேகர் தங்களின் வாழ்வில், முழுமையாக தேவனது திட்டத்தை தெரிந்துக்கொள்ள முடியாதிருந்தும். தேவனோ அவர்களின் வாழ்வில், தமது நித்திய திட்டத்தை நிறைவேற்றினார்.

**நாம் என்னசெய்ய வேண்டுமென்று நமக்கு தெரியாமல்போனாலும், நம்மைக்கொண்டு என்ன செய்யவேண்டுமென்று, நம்மை அழைத்த தேவனுக்கு தெரியும்!**

# Missionary Biography

நம் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்குவதற்காக அநேக தேவமனிதர்கள் தங்கள் வாழ்க்கைகளை தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்களை மிக எளிதாக மிஷனரிகள் என்று சொல்லிவிடுகிறோம். அந்த வார்த்தைக்கு பின் உள்ள அர்த்தம் புரிந்துகொள்ள இயலாதது. நிச்சயமாக அவைகளை வெறும் வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. கிறிஸ்துவின் அன்பால் மட்டுமே ஏவப்பட்டு அவர்கள் செய்த தியாகம் நேரம், பொருள், குடும்பம், இருக்கும் ஒரே உயிர்.... சொல்லிக்கொண்டே போகலாம். திருச்சபைகளில் அமர்ந்து கொண்டு ஒருநிமிடம் அவைகளை நினைத்துப்பார்த்தால் திருச்சபைகளில் நிச்சயம் பிரச்சனைகள் தோன்றாது. ஏன் எனில் அவர்கள் போட்ட அஸ்திபாரத்தில் தான் நாம் இன்று கட்டிக்கொண்டிருக்கிறோம்.

தேவமனிதர்கள் சாதனைப் வாழ்க்கையை தொடர்ச்சியாக வெளியிடுகிறோம். இத்தொடர் சிறப்புடன் தொடரவும், அனேகருடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவரவும் ஜெபியுங்கள்.

## வேதாகமத்தை எரித்த...

**சிறு வயதில் வேதாகமத்தை கிழித்து நெருப்பிலிட்டுக் கொளுத்தும் அளவுக்கு கிறிஸ்தவ நம்பிக்கை மீது வெறுப்பு கொண்டிருந்தவர் சுந்தர் சிங். ஆயினும் திருத்தூதர் பவுலை சந்தித்தது போல, இயேசு இரட்சகர் சுந்தர் சிங் அவர்களையும் தடுத்தாட்க் கொண்டு அவரை அற்புதவிதமாய் மாற்றினார்.**

**சாது சுந்தர்சிங் பொன்மொழி:**

நமக்குச் சமயக் கோட்பாடுகள் தேவையில்லை. இத்தகையவை நம்மிடம் தேவைக்குமேல் உள்ளன... கோட்பாடுகளால் இளைத்துப் போனோம்.

**இளம் வயதில் நேசத் தாயின் மரணம், ஆதரவற்ற வெறுமை உணர்வு ஆகியவற்றால் தற்கொலை செய்யும் எண்ணத்தோடு இருந்த சுந்தர் சிங் மனதை மாற்ற தரிசனம் தந்து தம்முடைய ஊழியராகவும் மாற்றினார். சாது சுந்தர் சிங் கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின்பாகத் தன்னுடையப் பெற்றோர்களாலும் உறவினர்களாலும் வெறுக்கப்பட்டார்.**

**சாது சுந்தர் சிங்கிடம் அவருடையப் பெற்றோர் மற்றும் உறவினர்கள் வந்து கிறிஸ்துவை மறுதலித்து விடும்படிக் கூறினர்.ஆனால் அவரோ நான் கிறிஸ்துவைத் தான் பின்பற்றுவேன் என்று உறுதியாகக் கூறினார். ஒரு நாள் சாது சுந்தர் சிங் வெளியேச் சென்று தன்னுடைய நீளமான முடியை வெட்டிக் கொண்டு வந்தார். அதைப் பார்த்த சாது சுந்தர் சிங்கின் தகப்பனார் கோபத்துடன் சுந்தரிடம் வீட்டை விட்டு வெளியேறும் படி கூறினார். அன்று இரவு சாது சுந்தர் சிங்கின் உணவில் விஷத்தை கலந்து அவருக்குச் சாப்பிடக் கொடுத்தனர். அவர் இரவு உணவை உண்ட பின்பாக அவரை வீட்டை விட்டு விரட்டி விட்டனர். உணவில் விஷம் கலக்கப்பட்டது தெரியாமல் இவரும் இரயிலில் பயணம் மேற்கொண்டார். இரயிலில் மயங்கி விழுந்த அவரை காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவர் இவர் கடவுளின் அருளால் தான் பிழைத்தார் என்று சாட்சி பகர்ந்தார்.**

**சாது சுந்தர் சிங் என்ற பெயரில் காவி உடை தரித்து இந்திய கிறிஸ்தவ துறவியாகி, எங்கும் நடந்தே சென்று நற்செய்தி அறிவித்தார். தன் ஊழியத்திற்கு**

திருமண பந்தம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கில், மணத்துறவு பூண்டு முழுவதுமாக இறைப்பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஊழியர் இவர்.

சிறையில் அடைக்கப் பட்ட போதும், பாதாள கிணற்றில் தள்ளப்பட்ட போதும் கொஞ்சமும் பின்வாங்காமல் ஆபத்து நிறந்த திபெத் மலைப் பகுதிகளில் கூட ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்து வந்தார். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அவர் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டிருக்கிறார். இருபதாம் நூற்றாண்டின் வல்லமையான ஒரு தேவ ஊழியர் இவர். எந்த சபையினையும் சாராத ஊழியராயினும், எல்லாச் சபையினரோடும் இணைந்து ஊழியம் செய்தவர் இவர்.

பல முறை மரணத்தின் அருகில் சென்ற சாது சுந்தர் சிங்கைக் காப்பாற்றிய தேவன் அவரை இந்திய தேசம் மட்டுமல்லாது சீன மற்றும் இலங்கை தேசத்திலும் அவரை வல்லமையாகப் பயன்படுத்தினார். இந்திய தேசத்து அப்போஸ்தலன் என்று மக்களால் போற்றப்பட்டார். நாமும் கிறிஸ்துவுக்காக நம்மை முழுவதுமாக அர்ப்பணித்து வாழும் போது நாம் துன்பத்தில் நடந்தாலும் கர்த்தர் நம்மை உயிர்பித்து வழிநடத்துவார்.

நமக்குத் தேவை
வாழும் கிறிஸ்து...
அருளுரையாற்று
வோரயும்,
போதிப்போரையும்
விட...
இயேசுக்
கிறிஸ்துவை முழு
வாழ்வாலும்
உணர்வாலும்
வெளிப்படுத்துகின்ற
**தொண்டர்களே.**

**நம் சிந்தனைக்கு:** நான் என்னைக் கிறிஸ்துவுக்கு முற்றிலுமாய் அர்ப்பணித்திருக்கிறேனா? என் ஊழியம் கிறிஸ்துவுக்குள் அனைவரையும் ஒன்று படுத்தும் ஊழியமா? பிளவு படுத்தும் ஊழியமா?

**சாது சுந்தர் சிங் அவர்களின் சில மேற்கோள்கள்:**

- உடைந்த உள்ளத்தை அதை உருவாக்கினவரே அல்லாது, வேறு எவரால் குணப்படுத்தக்கூடும்?
- நம் ஆத்துமாவை சமாதானத்தாலும் மகிழ்ச்சியினாலும் நிரப்புவதே மகத்தான அற்புதம்.
- ஒவ்வெரு மனிதனும், தன் சுயசித்தத்தால் தனக்குள்ள முழுதிறனுக்கேற்ப தீமையைக் களைவேன் என உறுதிபூண்டாலன்றி பூமியினின்று தீமையை ஒழித்தல் இயலாது.




**சாது சுந்தர் சிங் அவர்களின் சில புத்தகங்கள்:**

1. ஆத்மீக வாழ்க்கைத் தியானங்கள்
2. திருவடி உபதேசம்
3. மெய் வாழ்வு
4. மெய்ப் பொருளும் மார்க்கமும்
5. கிறிஸ்துவுடன் வாழ்தலும் கிறிஸ்துவின்றி வாழ்தலும்

"ஜெபம்: கடவுளின் சித்தத்தை மாற்றுவதில்லை; மாறாக கடவுளின் சித்தத்திற்கு ஏற்ப ஜெபிக்கின்றவர்களின் விருப்பத்தையும் வாழ்வையும் மாற்றுகின்றது."

# கட்டுரைகள் / Articles




தேவனோடு உறவாடுதல் அல்லது ஜெபம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை அல்லது ஆணிவேர் என்று சொல்லலாம். தகப்பனோடு பிள்ளைகள் உறவாடி மகிழ்வது போல நாம் தேவனோடு உறவாடி மகிழவேண்டும் என்பது அவரது விருப்பம். இந்த புத்திர சுவிகாரத்தின் உரிமையை மறக்கும் போது இந்த உலகத்தின் அதிபதியின் பிள்ளையாக நம்மையும் அறியாமல் மாறி விடுகிறோம். இந்நிலைமையை நாம் தவிர்க்க உதவும் காரியங்களைப் பார்க்கலாம்.

**1. கேள்விகள் வேண்டாம்:**

கேள்விகள் கேட்பதில் நாம் வல்லுநர்கள். அதிலும் நம்மை படைத்த கர்த்தரிடம் கேள்வி கேட்பதில் திறமைசாலிகள். “ஏன் எனக்கு வியாதி, ஏன் வறுமை, கடன் பிரச்சினை, துன்பம், ஏன் பிள்ளைகள் இப்படியிருக்கிறார்கள். ஏன் என் கணவன் (மனைவி) என்னை புரிந்து கொள்ளவில்லை. இன்னும் பல பல...” அனேக வேளைகளில் நாம் நம் பரம பிதாவோடு உறவாடி மகிழக்கூடிய நேரத்தை கேள்வி கேட்டு வீணடிக்கிறவர்களாக காணப்படுகிறோம். ஆனால் நம்மை கேள்வி கேட்க தவறிவிடுகிறோம். தேவன் யோபுவை என் தாசனாகிய யோபு (யோபு 1:8, 2:3) என்று அழைத்தார். யோபுவுக்கு இழப்புகள் (1:15-17), வியாதி (2:7), மனைவி மற்றும் நண்பர்களின் அவமான வார்த்தை என அடுக்கடுக்காய் துன்பங்கள் வந்த போதும் கேள்வி கேட்கவில்லை. அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னார். கடவுள் யோபுவிடம் கேள்வி கேட்ட போது பதில் சொல்ல நடுங்கினார். நம்மை படைத்த கடவுளிடம் கேள்வி கேட்க முற்பட வேண்டாம். லூக்.18:13 ரூ 14 இல் தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று ஜெபித்த ஆயக்காரனைஇ “நீதிமானாக்கப் பட்டவனாய் தன் வீட்டுக்கு திரும்பி போனான்” என்று இயேசு கிறிஸ்து மேற்கோள் காட்டி கூறியதை நாம் பார்க்கலாம். அது போல நாமும், ஆண்டவரே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று நம்மை தாழ்த்தி ஜெபிக்கும் போது நமது கேள்விகள் விண்ணப்பங்களாக மாறும்.

**2. விளக்க உரைகள் வேண்டாம்:**

தாவீது சொல்லும் போது “என் கருவை உம்முடைய கண்கள் கண்டது என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது” (சங். 139:16). நாம் உருவாகுவதற்கு முன்னே நம்மை கண்ட கடவுளிடம்

தேவையற்ற விளக்கங்களை கூற எத்தனிக்காமல் நம் மனபாரங்களை அவரிடம் சொல்லி சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெறும் இனிய அனுபவங்கள் வாழ்வில் பெருகும் வண்ணமாய் விண்ணப்பிப்போம். நமது பிள்ளைகளின் முகம் மாறும் போது நம்மால் சகித்துக்கொள்ள முடியாமல் அவர்களது தேவைகளை நிறைவேற்றுகிறோம். நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்.7:11).

**3. விதி முறைகள் வேண்டாம்:**

